முருகப்பெருமான் துணை

**மகான் ஔவையார் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

20.07.2021, செவ்வாய்கிழமை

1. வரம்பெற்று வந்த வள்ளலே
வாழும் ஞானியே அரங்கனே
அறம்போற்றி மக்களை மீட்க
அவதாரம் புரிந்த தேசிகனே
2. தேசிகனே உன்வழி உலகோர்
தேற்றம் பெறுவர் எனக்கூறி
ஆசிபட ஔவையார் யானும்
அருளுவேன் பிலவ நள்ளி திங்கள்
3. திங்களிலே சதுர்திகதி குசன்வாரம்
(பிலவ வருடம் ஆடி மாதம் 4ம் நாள், 20.07.2021 செவ்வாய்கிழமை)
தெரிவிப்பேன் துல்லிய ஆசிதன்னை
ஓங்கார ஞான உலகம் அமைய
ஓங்கார குடில் படைத்து அருளும்
4. அருளும் அரங்க ஞானி வழி
அமைதிபட உலகோர் வந்து
அருளும் பொருளும் பெருகும்படி
ஆசி தீட்சை அடைந்து வருக
5. வருகவே வையகம் தன்னில்
வளமான வல்லமையான சூழல்
தரும சக்தியாக பரவி நின்று
தரணியே பாதுகாப்பு தனைஅடையும்
6. அடையவே சன்மார்க்க நெறி எனும்
ஆன்மீக வழிகள் மக்களிடை
தடையற ஞானமாகப் பரவிட
தவசியின் தருமம் வளர்ந்திட
7. வளர்ந்திட வையகம் எங்கும்
வள்ளல் தன்மை கொண்ட
தளர்விலா மக்கள் படைபெருகி
தவசியின் அவதார நோக்கம்
8. நோக்கம் வெற்றியாகி இனிதே
நிலவுலகம் சர்வபலம் காணும்
தேக்கமின்றி உலக மக்களுக்கு
தெளிவு திடம் பூரண ஞானமாகி

9. ஆகியே கலியுகம் தன்னில்
அனைத்து எதிர் வினைகளும்
அகிலத்தை விட்டு அகன்றோடி
அமைதி பாதுகாப்பு பெருகி

10. பெருகியே கலியுகம் தானும்
பேரிடரை வென்று சிறக்கும்
முருகப் பெருமான் அருளும் தயவும்
முழுமை நிலையும் கண்டு தேறும்

11. தேறவே ஞானயுகம் ஆக்க
தேசிகன் காட்டும் வழிகள்
அறமாக வரமாக மக்களிடைவர
அனுகி தொடர அற்புதம் நிகழும் சடுதி
துல்லிய ஆசி முற்றே

–சுபம்–